# தமிழரின் வீரவிளையாட்டுகள் – ஒரு பார்வை

9

**மணிமேகலை இராமமூர்த்தி**

**தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்**

**ஆய்வுச்சுருக்கம்:**

வீரமும் காதலும் தமிழர் வாழ்வின் இருகண்களாய்த் திகழ்ந்தவை என்பதைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிகின்றோம். தமிழரின் காதலை அகத்திணைப் பாடல்கள் பரக்கப் பேசுவதுபோல் தமிழரின் வீரத்தைப் புறத்திணைப் பாடல்கள் சிறக்கப் பேசுகின்றன. 'விழுப்புண் படாத நாளெல்லாம் வீண்நாளே' என்பதே தமிழக வீரர்களின் எண்ணம் என்பதனைத் திருக்குறள் நமக்குத் தெளிவுபடுத்துகின்றது.

ஆடவர் மட்டுமல்லாது அன்றைய பெண்டிரும் வீரத்தைப் போற்றுபவராய்த் திகழ்ந்தனர்; காளையை வென்றடக்கும் காளையரை மணப்பதையே முல்லைநிலப் பெண்கள் விரும்பினர் என்பதற்கு முல்லைக்கலிப் பாடல்கள் சான்றாய் அமைகின்றன.

போரற்ற காலங்களில் பொழுதுபோக்குவதற்குக்கூட வீர விளையாட்டுகளையே நாடினர் தமிழர். ஏறுதழுவுதல், மல்லாடல், வேட்டையாடல், ஆனைப்போர், ஆட்டுப்போர், சேவற்போர் முதலியன தமிழரின் வீரவிளையாட்டுகளில் சிலவாகும்.

இவ்வாறு தமிழர் விளையாடிய வீரவிளையாட்டுகளைச் சான்றுகளோடு விளக்குவதே இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**: தமிழரின் வீரவிளையாட்டுகள், முல்லைக்கலி, ஏறுதழுவுதல், மல்லாடல், ஆனைப்போர், ஆட்டுப்போர், சேவற்போர்.

**முன்னுரை:** வீரமும் காதலும் தமிழர் வாழ்வின் இருகண்களாய்த் திகழ்ந்தவை என்பதைச் சங்க இலக்கியங்கள் அங்கை நெல்லியென நமக்கு அறியத் தருகின்றன. தமிழரின் காதலைப் பாடும் அகத்திணைப்பாடல்களைப் போலவே அவர்தம் வீரத்தைப் பாடிப் பெருமிதம் கொள்பவை புறத்திணைப் பாடல்கள். முடியாட்சி நடைபெற்ற அற்றைத் தமிழகத்தில், 'விழுப்புண் படாத நாளெல்லாம் வீண்நாளே' என்பதே தமிழக வீரர்களின் எண்ணமாயிருந்தது என்பதை வான்புகழ் வள்ளுவரின் திருக்குறள் நமக்குத் தெளிவுபடுத்துகின்றது.

**விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள்**
**வைக்கும்தன் நாளை எடுத்து.** (குறள் - 776)

போரற்ற காலங்களில் பொழுதுபோக்குவதற்குக்கூட வீர விளையாட்டுகளையே நாடியிருக்கின்றனர் நம் தமிழர். அவ்வாறு அவர்கள் விளையாடிய வீரம்செறிந்த விளையாட்டுகள் சிலவற்றை இக்கட்டுரையில் காண்போம்.

**ஏறுதழுவுதல்:** ஏற்றினைத் தழுவி அதன் திமிலைப் பிடித்து ஆடவர் அடக்குதலே ஏறுதழுவுதல் அல்லது ஏறுகோளாகும் (bull-taming sport). இவ்விளையாட்டு ஆநிரைகளையே தம் செல்வமாய்க் கொண்டிருந்த முல்லைநிலத்து மக்களிடையே அன்று மிகச்சாதாரணமாய் நடந்த ஓர் நிகழ்வு என்பதைச் சங்க இலக்கிய நூலான கலித்தொகை வாயிலாக அறிகின்றோம். காளைகளின் கொம்பைப் பிடித்தல்

ஆண்மை, வாலைப்பிடித்தல் தாழ்மை என்பது தமிழர்கொள்கை.

முல்லைநிலத்துக் காரிகையரை மணமுடிக்க அப்பகுதியைச் சார்ந்த ஆடவர் ஏறுதழுவுதல் எனும் வீரவிளையாட்டில் வென்றேயாகவேண்டும் என்பது நியதி. வளமான புல்லையுண்டு தளதளவெனக் கொழுத்துநின்ற ஏறுகள், கொடும்புலிகளையும் அடும் வீரமும் ஆற்றலும் மிக்கவை. ஆதலால், அவற்றைக் 'கொல்லேறு' என்கின்றது சங்க இலக்கியம். அந்தக் கொல்லேற்றின் கொம்பைக்கண்டு அஞ்சாத வீரமறவனையே அந்நிலத்து மகளிர் மணப்பர். அவ்வாறில்லாது, ஏற்றைக்கண்டு அஞ்சித் தோற்றோடுவோனின் தோள்களை இம்மை மட்டுமின்றி மறுமையிலும் தழுவ மாட்டார்கள் அம்மகளிர் என்கின்றது முல்லைக்கலிப் பாடலொன்று.

**கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும் புல்லாளே ஆயமகள்.** (கலித்தொகை - 103: 63-64)

அந்நாளைய ஏறுதழுவுதலே இந்நாளைய 'சல்லிக்கட்டாகும்.' மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த அலங்காநல்லூர், அவனியாபுரம், பாலமேடு போன்ற ஊர்களிலும் சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களின் சில பகுதிகளிலும் தமிழ்மரபின் எச்சமான இவ் வீரவிளையாட்டு இன்றும் தொடர்ந்து நடைபெற்றுவருவது மகிழ்ச்சிக்குரியது.

**மல்லாடல்:** மற்போர் (wrestling) என்ற பெயரில் அன்று நடைபெற்றுவந்த மல்லாடலும் ஓர் வீரவிளையாட்டேயாகும். தமிழகத்தில் வீரமல்லர்கள் பலர் அன்றிருந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவன் உறந்தையிலிருந்த (உறையூர்) வேளிர்தலைவனான தித்தன் என்பவனின் மகனான பெருநற்கிள்ளி. அழகும் ஆற்றலும் ஒருங்கே பொருந்திய வீர இளைஞனான பெருநற்கிள்ளி, 'போரவை' என்று அழைக்கப்பட்ட மற்போர்ப் பயிற்சிக்கூடமொன்றை நடாத்திவந்தமையால் 'போரவைக் கோப்பெருநற்கிள்ளி' என்றே அழைக்கப்பட்டான். யாது காரணத்தாலோ, 'நொச்சிவேலித் தித்தன்' என்று பரணரால் புகழந்துபோற்றப்பட்ட (அகம்.122) தித்தனுக்கும், அவனுடைய வீரமைந்தனான பெருநற்கிள்ளிக்கும் மனவேறுபாடு ஏற்பட்டுவிட்டது. அதனால், மகனென்றும் பாராது கிள்ளியை ஊரைவிட்டே வெளியேற்றிவிடுகின்றான் தித்தன்.

உறந்தையிலிருந்து வெளியேறிய பெருநற்கிள்ளி பலவிடங்களில் சுற்றிவிட்டு முக்காவல் நாட்டிலுள்ள ஆமூர் எனும் ஊரில்வந்து தங்கினான். அவ்வூரில் புகழ்பெற்ற மல்லன் ஒருவன் இருந்தான். அவன் பெருநற்கிள்ளி மல்லாடலில் வல்லவன் என்பதையறிந்து அவனை மல்யுத்தத்துக்கு அறைகூவி அழைத்தான். சிலிர்த்தெழுந்த கிள்ளி, அந்த மல்லனின் மார்பின்மீது ஒருகாலும், முதுகின்மீது மற்றொருகாலும் வைத்து அவன் மதவலியை முருக்கி, பசித்த யானை மூங்கிலைத் தின்பதுபோல், அவன் தலையையும் காலையும் முறியமோதி அவனை வென்றான். இந்தக் காட்சியைக்கண்டு வியப்பும் பெருமிதமும் அடைந்த புலவர் சாத்தந்தையார், "மகன்புரிந்த இந்த அற்புதப் போரினைத் தித்தன் (விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்) கண்டிருக்கவேண்டுமே!" என்று மெய்புளகித்துப் பேசுகின்றார்.

**…. ஆமூர் ஆங்கண்**

**மைந்துடை மல்லன் மதவலி முருக்கி**

**ஒருகால் மார்பொதுங் கின்றே ஒருகால்**
**வருதார் தாங்கிப் பின்னொதுங் கின்றே**
**நல்கினும் நல்கான் ஆயினும் வெல்போர்**
**போரருந் தித்தன் காண்கதில் அம்ம**
**பசித்துப் பணைமுயலும் யானை போல**
**இருதலை ஒசிய எற்றிக்**
**களம்புகு மல்லர் கடந்தடு நிலையே.** (புறம் – 80)

**வேட்டையாடல்:** வேட்டையாடுதல் அன்று சிலருக்குத் தொழிலாகவும் சிலருக்குப் பொழுதுபோக்கான வீரவிளையாட்டாகவும் விளங்கிற்று. வேட்டையைத் தொழிலாகக்கொண்டோர் 'வேடர்' என்றும் 'வேட்டுவர்' என்றும் அழைக்கப்பட்டனர். குறுநிலமாண்ட வேளிரும், பெருநிலமாண்ட வேந்தரும் இதனைப் பொழுதுபோக்காய்க் கொண்டிருந்தனர். கொல்லிமலைத் தலைவனான 'வல்வில்' ஓரி, ஓர் அம்பிலேயே யானை, புலி, மான், முள்ளம்பன்றி, உடும்பு என ஐந்து விலங்குகளை வீழ்த்தும் வில்லாளனாய்த் திகழ்ந்தான். அதன்காரணமாக, வில்லிலே வல்லவன் எனும்பொருள்பட 'வல்வில்' ஓரி என்று விளிக்கப்பட்டான்.

விலங்குகளைக் கொன்றழிக்கும் கொலைத்தொழிலாய் வேட்டம் விளங்கியபோதினும், அதிலும் ஓர் அறநெறியைப் பேணினர் வேட்டுவர். விலங்குகளின் குட்டிகளையும், கருவுற்று வயிறலைத்து ஓடும் பெட்டை விலங்குகளையும் கொல்லாது விடுத்து, வலிய விலங்குகளை வேட்டையாடுவதையே வேட்டுவர் தம் வழக்கமாய்க் கொண்டிருந்தனர் என்பதனைப் பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள கண்ணப்ப நாயனார் புராணம்வாயிலாய் நாம் அறிகின்றபோது வீரத்திலும் வெளிப்படும் தமிழ் வேட்டுவர்தம் ஈரம் நம்மை நெகிழ்ச்சியுறச் செய்கின்றது.

**துடியடியன மடிசெவியன**
**துறுகயமுனி தொடரார்**
**வெடிபடவிரி சிறுகுருளைகள்**
**மிகைபடுகொலை விரவார்**
**அடிதளர்வுறு கருவுடையன**
**அணைவுறுபிணை அலையார்**
**கொடியனஎதிர் முடுகியும்உறு**
**கொலைபுரிசிலை மறவோர்.** (பெ.புரா. – கண்ணப்பநாயனார் புராணம்)

இவ்வேட்டைக்கலை சங்க காலத்தோடு மங்கிவிடவில்லை. **18-**ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்து**,** வெள்ளையரை எதிர்த்து வீரமரணடைந்த மருதுசகோதரர்களில் மூத்தவரான பெரியமருது மிகச்சிறந்த வேட்டைக்காரராய்த் திகழ்ந்திருக்கின்றார்**.** இச்செய்தியை**,** மருதுசகோதரர்களோடு நெருங்கிப் பழகிய ஆங்கில அதிகாரி ஒருவர் தம் நூலில் பதிவுசெய்திருக்கின்றார் **என்**றறிகின்றோம்.

**ஆனைப்போர்:** மனிதரும் மனிதரும் புரிந்த போர், மனிதர் விலங்குகளோடு புரிந்த போர் இவையல்லாது விலங்கினங்களையும் மோதவிட்டு வேடிக்கைபார்த்து மகிழ்ந்திருக்கின்றனர்

பண்டைத்தமிழர். அவற்றுள் ஒன்று ஆனைப்போர். கருமலை போன்ற ஆனைகளை ஒன்றோடொன்று போர்புரியச் செய்தனர்; அப்போரை அச்சமின்றிப் பாதுகாப்பாய்க் காண்பதற்கென்றே அரசர்களின் தலைநகரங்களில் அன்று தனிமாடங்கள் இருந்தன.

வள்ளுவரும், கைப்பொருள் ஒன்று தன்னிடமிருக்க அதனைக் கொண்டு ஒருவன் ஒருசெயலைச் செய்தல், மலையின்மேல் ஏறி, யானைப் போரைக் கண்டாற்போன்று பாதுகாப்பானது என்கின்றார்.

**குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று**
**உண்டாகச் செய்வான் வினை.** (குறள்: 758)

**ஆட்டுப்போர்:** ஆனைப்போரைப் போலவே ஆட்டுக்கிடாய்களை மோதவிட்டுக் களித்திருக்கின்றனர் தமிழ்க்குடியினர். அதற்கென்றே ஆட்டுக்கிடாய்களைச் சிலர் வளர்க்கவும் செய்திருக்கின்றனர். இவற்றைப் 'பொருதகர்' என்கின்றார் தெய்வப்புலவர்.

**ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்**
**தாக்கற்குப் பேருந் தகைத்து.** (குறள்: 486)

ஊக்கமுடையவன் காலம்பார்த்து ஒடுங்கியிருப்பது, ஆட்டுக்கடா தாக்குவதற்குக் காலம்பார்த்து எவ்வாறு பின்வாங்குமோ அதனை ஒக்கும் என்பது இதன் பொருளாகும்.

**சேவற்போர்**: விலங்கினங்களைப் போலவே பறவையினங்களும் போரில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன. கோழிச்சேவல்கள், காடைகள் போன்றவற்றைப் போரிடச்செய்து அவற்றை ஆர்வத்தோடு கண்டு மகிழ்ந்திருக்கின்றனர் நம் மக்கள். சேவல்களின் கால்களில் முள்ளையோ கத்தியையோ கட்டி, எதிராளியின் சேவலைக் கொல்லும் முறையற்ற செயல்களும் அப்போர்களில் நடைபெற்றமையைக் கம்பராமாயணப் பாடலின்மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

**கறுப்புறு மனமும் கண்ணில் சிவப்புறு சூட்டும் காட்டி**
**உறுப்புறு படையின் தாக்கி உறுபகை இன்றிச் சீறி**
**வெறுப்பில களிப்பின் வெம்போர் மதுகைய வீரவாழ்க்கை**
**மறுப்பட ஆவிபேணா வாரணம் பொருத்துவாரும்.** (கம்ப: பாலகாண்டம் - 47)

என்று சேவற்போரின் தன்மையைக் கம்ப காவியம் பேசுகின்றது.

முற்காலச்சோழரின் தலைநகரான உறையூரில் வீரக்கோழிகள் மிகுந்திருந்தமையால் அதற்குக் 'கோழியூர்' என்ற பெயரும், அதனையாண்ட சோழருக்குக் 'கோழிச்சோழர்' என்றபெயரும் ஏற்பட்டன.

**முடிவுரை:** பொருதலில்லா வாழ்க்கை பொருளற்ற வாழ்க்கை எனும் கொள்கையுடையோராய் வாழ்ந்த பண்டைத் தமிழர், போரற்ற வேளைகளில் பொழுதுபோக்காய் விளையாடிய விளையாட்டுகள்கூட வீரத்தை மையமாகக் கொண்ட விளையாட்டுகளே என்பதை இலக்கியச் சான்றுகளோடு இக்கட்டுரையில் கண்டோம். ஆடவரோடு பெண்டிரும் வீர உணர்வினராய் வாழ்ந்த சங்க காலத்தை வீரயுகக் காலம் என்று வரலாற்றாய்வாளர்கள் வகைப்படுத்தியிருப்பது மிகவும் பொருத்தமானதே ஆகும்.

**கட்டுரைக்குத் துணைசெய்தவை:**

1. திருக்குறள் தெளிவுரை – டாக்டர் மு. வரதராசனார், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

2. கலித்தொகை மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்.
3. புறநானூறு – ஔவை சு.துரைசாமிப் பிள்ளை விளக்கவுரை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 154, டி.டி.கே. சாலை, சென்னை - 18.
4. பெரியபுராண மூலமும் திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார், பி.ஏ. அவர்கள் உரையும்.
5. இணைய முகவரி: https://www.tamilvu.org/ta/library-libcontnt-273141